**22.11.2022**

**அ.வ.எண். 232/2012**

**வா.சா.3 நடராஜ் அவர்களின் குறுக்கு விசாரணை**

மாயவன் என்பவர் சின்னக்கா பெயரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி நிலத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து எந்த மாவட்டத்தின் சொத்து என்றால் செங்கல்பட்டு மாவட்டம். வழக்கு தாக்கல் செய்தபோது தாவா சொத்து எந்த மாவட்டம் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து எந்த தாலுக்காவில் உள்ளது என்று எனக்கு தெரியாது.

தாவா சொத்து எந்த கிராமத்திலுள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் 30 ஏக்கர். 30 ஏக்கர் நிலத்தினை நான் பார்த்துள்ளேன். 30 ஏக்கர் நிலத்திற்கு மேற்கு பக்கம் ஆறு, வடக்கு பக்கம் ஏரி, கிழக்கு பக்கம் ராமதாஸ் நிலம், தெற்கு பக்கம் யாருடைய நிலம் என்று எனக்கு தெரியாது.

30 ஏக்கர் நிலம் எந்த வகைபாடை சேர்ந்தது என்றால் அதில் பாதி நஞ்சை நிலம், பாதி புஞ்சை நிலம். ராமதாஸின் தாத்தா பெயர் எனக்கு தெரியாது. அவரது அப்பா பெயர் துரைசாமி. ராமதாஸின் உடன் பிறந்தவர்கள் யார் என்று எனக்கு

தெரியாது. ராமதாஸின் தாத்தா உடன் பிறந்தவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. வாதி எனக்கு 2ம் கால் பங்காளி. வாதியின் தாத்தாவும் எனது தாத்தாவும் உடன் பிறந்தவர்கள்.

எனது தாத்தா பெயர் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் பெயர் துரைசாமி. எனது தகப்பனாரும், ராமதாஸின் தகப்பனாரும் வேறு வேறு நபர்கள். எனது தாத்தாவுடன் பிறந்தவர்களை பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பா துரைசாமியுடன் பிறந்தவர்கள் சின்னசாமி மற்றும் ராமசாமி. ராமதாஸின் தகப்பனார் துரைசாமியை நான் பார்த்ததில்லை. ராமதாஸை நான் பார்த்துள்ளேன். ராமதாஸுடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை.

எனது பிரமாணவாக்குமூலத்திலுள்ள விலாசத்தில் தான் வசிக்கிறேன் என்பதற்கு ஆவணங்கள் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். நாமக்கல் மாவட்டம், நல்லப்பன்நாயக்கன்பட்டி எனது பூர்வீகம் என்பதற்கு ஆவணம் வைத்துள்ளேனா என்றால் இல்லை. அங்குள்ள சொத்துக்களை விற்றுவிட்டு திருச்சி வந்துவிட்டேன்.

எனது தகப்பனாரின் பூர்வீகம் நாமக்கல் மாவட்டம் என்பதற்கு ஆவணம் எதுவும் இல்லை. நாமக்கல் மாவட்டத்திலுள்ள சொத்தினை விற்பனை

செய்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் அது எனது தகப்பனார் விற்பனை செய்தார், அது குறித்து எனக்கு தெரியாது. எனது தகப்பனார் விற்பனை செய்த சொத்து விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

நாமக்கல் மாவட்டத்திலுள்ள ராமதாஸின் பூர்வீக சொத்துக்களின் விவரங்கள் எனக்கு தெரியாது. அந்த சொத்துக்களை ராமதாஸ் எப்போது, யாருக்கு விற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. ராமதாஸ் அவரது சொத்துக்களை விற்பனை செய்தார் என்ற விவரத்தினை எனது தகப்பனார் என்னிடம் கூறினார். ராமதாஸ் யாரிடமிருந்து எந்த வருடம் சொத்துக்களை கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. ராமதாஸ் கிரையம் வாங்கிய நிலத்தின் சர்வே எண், விஸ்தீரணம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

நெல்வாய் கிராமத்தில் வசித்து வரும் தனலட்சுமியை நான் பார்த்துள்ளேன். அவருக்கு 60 அல்லது 65 வயது இருக்கும். அவரை கடைசியாக ராமதாஸ் இறக்கும் போது பார்த்தேன். நீதிமன்றத்தில் ஆஜரில் இருக்கும் நபர் சின்னக்காவின் மகள் தனலட்சுமி. ராமதாஸ் சுமார் 15 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். 15 வருடத்திற்கு முன்பு பார்த்த தனலட்சுமியை இப்போது தான் நீதிமன்றத்தில்

பார்க்கிறேன் என்றால் சரிதான்.

ராமதாஸ் நெல்வாய் கிராமத்தில் இறந்துவிட்டார். நெல்வாய் கிராமத்தில் வசித்து வரும் பரமேஸ்வரன் என்பவரை எனக்கு தெரியாது. வாதியுடன் பிறந்தவர்கள் ராமன், விநாயகம் மற்றும் சிவலிங்கம். அந்த 3 நபர்களையும் நான் பார்த்துள்ளேன். சிவலிங்கத்தின் மனைவி பெயர் எனக்கு தெரியாது. அவருக்கு ஒரு மகன், மூன்று மகள்கள் உள்ளார்கள். ராமனின் மனைவி பெயர் மற்றும் அவரது பிள்ளைகள் குறித்து எனக்கு தெரியாது. விநாயகத்தின் மனைவி பெயர் எனக்கு தெரியாது. அவருக்கு ஒரு மகன் மற்றும் மூன்று மகள்கள் உள்ளார்கள்.

சிவலிங்கம் மற்றும் விநாயகத்தின் பிள்ளைகள் பெயர் எனக்கு தெரியாது. வாதியின் மனைவி பெயர் விஜயா. அவருக்கு இரண்டு பிள்ளைகள். அவரது பெயர்கள் ஞாபகம் இல்லை. அவரது பிள்ளைகளை இன்றும் நான் பார்த்தேன். சின்னக்கா என்பவரை பார்த்துள்ளேன். அவரை பார்த்து சுமார் 10 வருடங்கள் ஆகிறது. அவர் கொரோனா தொற்று காலத்தில் இறந்துவிட்டதாக கூறினார்கள்.

சின்னக்காவின் பெற்றோர்கள் பெயர் எனக்கு தெரியாது. அவருக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்று எனக்கு தெரியாது. சின்னக்காவிற்கு ஒரு மகள், ஒரு மகன் இருக்கிறார்கள் என்று ராமதாஸ் சுமார் 15 வருடத்திற்கு முன்பு என்னிடம்

கூறினார். ராமதாஸின் மனைவி நாச்சாரம்மாள் என்பதற்கு நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நாச்சாரம்மாளின் பூர்வீகம் நல்லப்பநாயக்கன்பட்டி. அவரது மற்றொரு பெயர் லட்சுமி நாச்சாரம்மாள். அவரது பெற்றோர்கள் பெயர் எனக்கு தெரியாது. நாச்சாரம்மாளின் பூர்வீகம் நல்லப்பநாயக்கன்பட்டி என்பதற்கு ஆவணம் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் எனது பெற்றோர்கள் சொல்லி தான் எனக்கு தெரியும்.

எனக்கு சின்னக்காவை சுமார் 30 வருடங்களாக தெரியும். அவரை சுமார் 4,5 முறை பார்த்துள்ளேன். அவரது சொந்தஊர் செல்லிபாளையம். செல்லிபாளையம் எந்த மாவட்டம், எந்த தாலுக்கா என்று எனக்கு தெரியாது. செல்லிபாளையம் எனது ஊர் கொப்பம்பட்டி அருகில் உள்ளது. சின்னக்காவின் பெற்றோர்களின் பூர்வீகம் எனக்கு தெரியாது. சின்னக்காவின் வீட்டிற்கு நான் சென்றதில்லை. அவரை நெல்வாய் கிராமத்தில் தான் பார்த்தேன். சின்னக்காவுடன் நான் பேசியதில்லை. சின்னக்கா எந்த விலாசத்தில் வசித்து வந்தார் என்று எனக்கு தெரியாது.

நான் தற்போது சென்னை, பெருங்களத்தூரில் வசித்து வருகிறேன். அங்கு சொந்த வீடு உள்ளது. சுமார் 15 வருடங்களாக பெருங்களத்தூரில் வசித்து

வருகிறேன். அவ்வப்போது எனது மனைவி மற்றும் பேரபிள்ளைகளை பார்க்க கொப்பம்பட்டி சென்று வருவேன். கொப்பம்பட்டியில் எத்தனை வருடங்களாக வசித்து வருகிறேன் என்றால் கொப்பம்பட்டி தான் எனக்கு பூர்வீகம்.

வாதி எனது பங்காளி என்பதற்கும், ராமதாஸ் எனது பெரியப்பா என்பதற்கும் ஆவணம் எதேனும் உள்ளதா என்றால் இல்லை. எனது பெற்றோர்கள் சொல்லி தான் எனக்கு தெரியும். ராமதாஸுக்கு எப்போது திருமணம் நடந்தது என்று எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் விவாகரத்து ஆகவில்லை என்று சொல்லியது யார், யாருக்கு இடையே என்றால் சின்னக்கா மற்றும் அர்ச்சுனனுக்கு இடையே. இந்த விவரம் எனக்கு எனது அப்பா மற்றும் பெரியப்பா சொல்லி தான் தெரியும்.

சின்னக்கா என்பவர் அர்ச்சுனன் மனைவி என்று எனது பெரியப்பா சொல்லிதான் எனக்கு தெரியுமா என்றால் எனது அப்பா சொல்லி தான் தெரியும். எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். ராமதாஸின் மனைவியாக சின்னக்கா வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல. இந்த விவரம் எனது அப்பா மற்றும் பெரியப்பா சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான்.

தாவா சொத்து குறித்தும் வழக்கு குறித்தும் எந்த விவரமும் தெரியாமல் நான்

பொய் சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. வாதியின் வம்சாவழிபட்டியலும், எனது வம்சாவழிபட்டியலும் தெரியாமல் நான் வாதியின் பங்காளி என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் வாதியின் பங்காளி இல்லை என்றாலும் அவருக்கு நான் மூன்றாம் நபர் என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.